**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**01 12 2025 MONDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. **மகளிர் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

2. **நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் சாசனத்தை உறுதியுடன் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.**

3. **பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின்கீழ் இரண்டு கோடியே 72 லட்சம் கைவினைஞர்கள் பதிவு செய்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.**

4. **காசி தமிழ் சங்கமத்திற்கு, தமிழக மக்களிடையே ஆதரவும், வரவேற்பும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.**

5. **உலகக்கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.**

**- இனி விரிவான செய்திகள் ---**

**<<<<<>>>>>>**

மகளிர் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மகளிர் மேம்பாட்டிற்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள கட்டுரையையும் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

<<<<<>>>>>>>

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் சாசனத்தை உறுதியுடன் பின்பற்ற வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கிய நிலையில், மாநிலங்களவையை முதல் முறையாக வழிநடத்திய அவர், நாடாளுமன்ற நடைமுறைகளில் லஷ்மண ரேகையை உறுப்பினர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மக்களின் தேவைகளை உறுதியுடன் நிறைவேற்றுவதே நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமை என்று அவர் தெரிவித்தார்.

பயனுள்ள அர்த்தமுள்ள வார்த்தைகளை மட்டுமே பேச வேண்டும் என்ற திருவள்ளுவரின் திருக்குறளை மாநிலங்களவைத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

குடியரசு துணைத்தலைவராகவும், மாநிலங்களவைத் தலைவராகவும் நாட்டிற்கு சேவையாற்ற தமக்கு கிடைத்துள்ள வாய்ப்பு மிகவும் பெருமையளிப்பதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

முன்னதாக, திரு சி பி ராதாகிருஷ்ணனை, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மாநிலங்களவை கட்சித் தலைவர்கள் வரவேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பியதால் ஏற்பட்ட அமளி காரணமாக, மக்களவை இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று காலை கூடியதும், மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, கேள்விநேரத்தை தொடங்கிய நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் உள்ளிட்ட பிரச்சினையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பி அவையின் மையப்பகுதிக்கு வந்து முழக்கமிட்டதால் முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது மணிப்பூர் சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதாவை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

பின்னர், இந்த மசோதா எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<>>>>>>

பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின்கீழ் இதுவரை இரண்டு கோடியே 72 லட்சம் கைவினைஞர்கள் பதிவு செய்திருப்பதாக மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை இணையமைச்சர் ஷோபா கரந்தலாஜே தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 18 வகையான பாரம்பரிய தொழில்களை மேற்கொள்ளும் கைவினைக் கலைஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ், நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

23 லட்சம் பயனாளிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும், 7 லட்சம் பயனாளிகளுக்கு 23 கோடி ரூபாய்க்கும் அதிகமான ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் ஷோபா கரந்தலாஜே தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் 12 போலி பல்கலைக்கழகங்கள் கண்டறியப்பட்டு மூடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த மத்திய இணையமைச்சர் டாக்டர் Sukanta Majumdar, தற்போது 24 போலி பல்கலைக்கழகங்கள் செயல்படுவதாகவும், அவற்றை மூடுவதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு மத்திய அரசும், UGC-யும் அறிவுறுத்தி இருப்பதாகவும் கூறினார்.

இந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது மாநில அரசுகளின் அதிகாரத்தின்கீழ் வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போலியான பட்டங்களை வழங்கும் அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களுக்கு எதிராக விளக்கம் கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருப்பதாகவும் டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

வாரணாசியில் ஆண்டுதோறும் நடைபெறும் காசி தமிழ் சங்கமத்திற்கு, தமிழக மக்களிடையே ஆதரவும், வரவேற்பும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

காசி தமிழ் சங்கமம் நான்காவது ஆண்டு நிகழ்ச்சிகள் நாளை தொடங்க உள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு தமிழ் கற்கலாம் என்ற கருப்பொருளுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் மொழியின் பெருமையை நாட்டின் மற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களும்

தெரிந்துகொள்ளும் வகையில் இந்த ஆண்டு கருப்பொருள் அமைந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தமிழின் பெருமையை உலகெங்கும் ஓங்கி ஒலித்துவரும் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த ஆண்டு காசி தமிழ் சங்கமத்தின் மூலம் மற்ற மாநில மக்கள் தமிழ் மொழியின் சிறப்பை உணரும் வகையில் நடவடிக்கை எடுத்திருப்பதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகம், கேரளா உள்ளிட்ட 9 மாநிலங்களிலும், 3 யூனியன் பிரதேசங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்கீழ், இதுவரை 50 கோடியே 83 லட்சம் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமார் 51 கோடி வாக்காளர்கள் உள்ள நிலையில், 99 புள்ளி ஏழு இரண்டு சதவீதம் பேருக்கு படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 40 கோடி படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த மாதம் 4-ஆம் தேதி தொடங்கிய இந்த பணிகள், வரும் 11-ஆம் தேதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், 99 புள்ளி இரண்டு சதவீத விண்ணப்ப படிவங்களும், கேரளாவில் 98 புள்ளி எட்டு சதவீத விண்ணப்பப் படிவங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

போர் கப்பல் கட்டுமானத்துறையில் இந்தியா சுயசார்பு நிலையை எட்ட வேண்டியது அவசியம் என்று இந்திய கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார்.

புனேயில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் கடலோர பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறினார்.

கப்பல் கட்டுமானத் தொழில் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும் என்று அட்மிரல் தினேஷ் திரிபாதி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

**ஒருங்கிணைந்த கட்டண நடைமுறையான UPI-யின்கீழ் நவம்பர் மாத காலத்தில் ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

**கடந்த மாதத்தில் சராசரி அன்றாட பரிவர்த்தனை தொகை 87 ஆயிரத்து 721 கோடி ரூபாயாக இருந்தது என மத்திய அரசின் தகவல் தெரிவிக்கிறது.**

**நவம்பர் மாதத்தில் UPI பரிவர்த்தனை சராசரியாக 68 கோடியே 20 லட்சம் என்ற அளவில் இருந்ததாகவும், இது அக்டோபர் மாதத்தில் 66 கோடியே 80 லட்சமாக இருந்தது என்றும் அந்த தகவல் தெரிவிக்கிறது.**

**<<<<<>>>>>>**

**நாட்டின் தொழிற்சாலை உற்பத்தி வளர்ச்சி விகிதம் அக்டோபர் மாதத்தில் பூஜ்யம் புள்ளி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளது.**

**அக்டோபர் மாதத்தில் அதிக அளவிலான பண்டிகைகள் காரணமாக விடுமுறை நாட்கள் அதிகரித்ததால், மிக குறைந்த விகிதத்திலான வளர்ச்சியே எட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.**

எனினும், செப்டம்பர் மாதத்தில் தொழிற்சாலை உற்பத்தி விகிதம் நான்கு புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்ததாக மத்திய புள்ளியியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

Ditwah புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா ஒன்பதரை டன் உணவு தானியங்களை வழங்கியுள்ளது.

ஆபரேஷன் சாகர் பந்துவின்கீழ் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்பட்ட நிவாரண உதவிப் பொருட்கள் அந்நாட்டு அதிகாரிகளிடம் வழங்கப்பட்டன.

மேலும், இந்திய விமானப்படையின் விமானங்கள் மூலம், கூடாரங்கள், தார் பாய்கள், போர்வைகள் மற்றும் உடனடியாக பயன்படுத்தக்கூடிய உணவுப்பொருட்கள், மருந்துகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.

சிலியின் சாண்டியாகோவில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<**END**>>>>>>